**I.A.No.7/2026 in O.S.No.224/2017**

நாள் : 15.06.2026

உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர்/வாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151 படி, அசல் வழக்கு எண்.224/2017 ல் வாதி தரப்பில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை வரவழைப்பு செய்து குறியீடு செய்யும் வகைக்கு வாதி தரப்பு சாட்சியத்தை மீள்திறப்பு (Re – open) செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கானது, வாதி பிரதிவாதிக்கு எதிராக பிராது தபசில் சொத்தை பொறுத்து நிரந்தர ஏவுகட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் மேற்படி வழக்கில் வாதி தரப்பில் வாதுரைக்காக வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், மேற்படி 2 முதல் 4 வாதிகள் தரப்பில் தனக்கு வழங்கப்பட்ட பொது அதிகார ஆவணம் தனது தரப்பில் ஆவணமாக குறியீடு செய்து தவறிவிட்டது என்றும், ஆகவே மேற்படி ஆவணத்தை இவ்வழக்கில் குறியீடு செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது என்றும், மேலும் இவ்வழக்கில் வாதி தரப்பு சான்றாவணம் எண் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பனவடலிசத்திரம் காவல்நிலைய புகார்மனு ரசீதுக்கான புகார் மனு மற்றும் வாக்குமூலங்களை மேற்படி காவல்நிலையத்திலிருந்து வரவழைப்பு செய்து குறியீடு செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது என்றும், மேற்படி ஆவணங்கள் வாதியின் தவறுதலால் குறியீடு செய்யப்படாமல் போய்விட்டது என்றும், மேலும் ஆவணங்கள் மனுதாரின் வழக்கை ருசு செய்யக்கூடிய முக்கிய ஆவணங்கள் ஆகும் என்றும், மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்ட தவறல்ல என்றும், ஆகவே வழக்கில் வாதி தரப்பு சாட்சியத்தை மீள்திறப்பு (Re – open) செய்து வாதி தரப்பில் மேற்படி ஆவணங்களை வரவழைப்பு செய்ய வேண்டியதும் குறியீடு செய்ய வேண்டியதும் நீதியின் பொருட்டு அவசியமாயிருக்கிறது என்றும், இல்லாவிடில் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர்கள் குறிப்பிடும் வா.சா.ஆ.3 கொண்ட புகார் மனு ரசீதுக்குரிய கோப்புகளை இந்நீதிமன்றத்திற்கு வரவழைக்க வேண்டுமென்றால் உரிமையில் விசாரணை முறை விதிகள் 76 ன் படி தனியாக மனுத்தாக்கல் செய்து அதற்கு இந்நீதிமன்றத்திற்கு உரிய கட்டணங்களை செலுத்தி, அந்த மனு அனுமதிக்கப்படும் பட்சத்தில் மேற்கண்ட ஆவணங்களை வரவழைக்க இயலும் என்றும், ஆனால் மனுதாரர்கள் அவ்விதமான எந்த மனுவினையும் தாக்கல் செய்யாமல், நேரடியாக ஆவணங்களை வரவழைக்க வேண்டுமென கோரி ரீ ஒப்பன், ரீகால் மனுக்களை மட்டும் தாக்கல் செய்துள்ள நிலையில், மனுதார்களின் மனு

சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்றும், மேலும் காவல்நிலையத்தில் உள்ள புகார் மனு கோப்புகள், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படாத பட்சத்தில் அது மூன்று ஆண்டுகளுக்குள் அழிக்கப்பட்டுவிடக்கூடும் என்றும், ஆனால் மனுதாரர்கள் 2013 ம் ஆண்டுக்குரிய கோப்புகளை, 13 ஆண்டுகள் கழித்து இந்நீதிமன்றத்திற்கு வரவழைக்க கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ள நிலையில் அது ஏற்றுக் கொள்ளத்தக்கதில்லை என்றும், மேலும் மனுதாரர்கள் தங்களுக்குரிய பொது அதிகார ஆவணத்தை குறியீடு செய்ய விடுபட்டுவிட்டது என கூறியுள்ளது தவறானது ஆகும் என்றும், வா.சா.ஆ.1 ஐ குறுக்கு விசாரணை செய்த காலத்திலேயே மேற்கண்ட ஆவணம் தாக்கல் செய்யப்படாதது குறித்த இந்த எதிர்மனுதாரர் தரப்பில் குறிப்பிட்டு கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளது என்றும் எனவே அந்த காலகட்டத்திலேயே மனுதாரர்களுக்கு அது தொடர்பான சங்கதிகள் நன்கு தெரிந்திருந்தும், மனுதாரர்கள் மிகவும் காலப்பிற்பாடாக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேலும் இவ்வழக்கானது வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், வழக்கில் முடிவு ஏற்பட்டுவிடக்கூடாதென்ற கெட்ட நோக்கில், இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்களுக்கு இம்மனுவில் எவ்வித பரிகாரங்களும் கிடைக்கக்கூடியதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்களை பரிசீலித்ததில் அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பிராது தபசில் சொத்தை பொறுத்து நிரந்தர ஏவுகட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும், அசல் வழக்கில் தற்போது வாதிகள் தரப்பு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், வ.வி.எண்.9/2026 ல் தெரிவிக்கப்பட்டுள்ள 3 ஆவணங்களை நீதிமன்றத்திற்கு பனவடலிசத்திரம் காவல்நிலையத்திலிருந்து வரவழைக்கக்கோரி அம்மனுவையும், வ.வி.எண்.9/2026 ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் 2 முதல் 4 வாதிகளால் சுடலைமணிக்கு வழங்கப்பட்ட பொது அதிகார ஆவணம் ஆகியவற்றை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யும் வகைக்கு வா.சா.1 ஐ மீண்டும் அழைக்க உத்தரவிடக் கோரி வ.வி.எண்.8/2026 மனுவையும், அவ்வகைக்கு அசல் வழக்கை மறுதிறவு செய்யக்கோரி இம்மனுவையும் மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதையும் அறிய முடிகிறது.

இருதரப்பு வாதங்கள் மனு மற்றும் எதிருரை சங்கதிகளைப் பரிசீலித்ததில், அசல் வழக்கில் வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், வ.வி.எண்.9/2026 ல் தெரிவிக்கப்பட்டுள்ள 3 ஆவணங்களை நீதிமன்றத்திற்கு பனவடலிசத்திரம் காவல்நிலையத்திலிருந்து

வரவழைக்கக்கோரி அம்மனுவையும், வ.வி.எண்.9/2026 ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் 2 முதல் 4 வாதிகளால் சுடலைமணிக்கு வழங்கப்பட்ட பொது அதிகார ஆவணம் ஆகியவற்றை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யும் வகைக்கு வா.சா.1 ஐ மீண்டும் அழைக்க உத்தரவிடக் கோரி வ.வி.எண்.8/2026 மனுவையும், அவ்வகைக்கு அசல் வழக்கை மறுதிறவு செய்யக்கோரி இம்மனுவையும் மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது. இந்நிலையில் அசல் வழக்கை மறுதிறவு செய்யக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்தால் தான் வ.வி.எண்.8/2026 மற்றும் வ.வி.எண்.9/2026 மனுவில் மனுதாரர்கள் கோரிய பரிகாரம் குறித்து இறுதியாக தீர்மானிக்க முடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனினும், இம்மனுவை அனுமதித்து அசல் வழக்கை மறுதிறவு செய்வதால் எதிர்மனுதாரருக்கு ஏற்படும் அலைச்சல் மற்றும் கஷ்ட நஷ்டத்தைக் கருத்தில் கொண்டு, மனுதாரர்களின் இம்மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் அனுமதித்து உத்தரவிட இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/வாதிகள் இந்த எதிர்மனுதாரருக்கு செலவு தொகையாக ரூ.1500/−ஐ வரும் 30.06.2026 ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படுமென்றும், தவறும்பட்சத்தில், இம்மனு தானாக தள்ளுபடி ஆனதாகக் கருதப்படுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மனுவை மீண்டும் அழைக்க 01.07.2026.

கூ.மா.உ..நீ.
சங்கரன்கோவில்.
23.06.2026